Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

இந்து சாதனம்

விரோதி ௵ (1889) ஆவணி ௴ 28௳ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், முசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-௬௭] யாழ்ப்பாணம்:- மன்மத ௵ தை ௴ ௨௧ ௨ வெள்ளிக்கிழமை (3 FEB 1956) [இல-௪௪]

உலகம் போற்றும் உத்தமர்

மனத்திலுள்ளபடி வாயாற் சொல்லி வாழ்ந்து காட்டிய மேதாவி

தனக்கென வாழாது பிறர்க்குரியராகிய மகாத்மா

பெரியோர் நினைவு விழாக்கள் கொண்டாடுவதன் பெரும்பயன் அன்னவர் சென்ற வழியில் நாமும் செல்ல ஊக்குவித்தலேயாம். உண்மையே உலகை ஈடேற்றும் என்று கண்டார் காந்தியடிகள். கண்டபடி வாழ்ந்து காட்டினார். மொழிப் பிணக்காலுண்டான முன்னணிப் பிணக்கு தமிழ்மக்களின் மனத்தைக் கலக்குகின்றது. எங்கள் மீட்சிக்கு வழி எது என்று தீர்மானிக்க வேண்டிய இத் தருணத்தில் தத்தம் துறையே அமைவதாகக்கூறிச் சித்தம் தடுமாறச் செய்கின்றனர் தலைவர்களென முன்னுக்கு நிற்போர். துன்பம் சூழ்ந்த இவ்வேளையில் ஆசிரியர், ஸ்ரீ சி. சரவணபவன் அவர்கள் காந்தி அடிகளைப்பற்றித் தந்திருக்கும் இக் கட்டுரையில் யார் சொல்லைக் கேட்பது எவ்வழிச் செல்வது என்பதைத் தீர்மானிப்பதற்குப் பல அறிவுரைகளைக் காணலாம்.

சென்ற திங்கட்கிழமைதொடக்கம் அஹிம்சா மூர்த்தியின்நினைவு விழாவை உலகெங்கணுமுள்ள மக்கள் கொண்டாடி வருகின்றனர். இலங்கையிலும் பற்பல ஈழக சமய ஸ்தாபனங்கள் காந்தியடிகளின் விழாவைச் சிறப்புடன் கொண்டாடின. அரசியலில் குழப்பமும் வீண் பேச்சுக்களும் மிகுந்து வரும் இந் நாளில் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த ஒரு பெரியாரின் வாழ்க்கையைப்பற்றிச் சிறிது சிந்தித்தல் நன்மை பயப்பதாகும்.

பெரிய மனிதர்களைப் பற்றி எண்ணும்போது மேனாட்டு அறிஞர் ஒருவர் கூறிய அருமையான வாசகம் ஒன்று நினைவிற்குவருகின்றது. "The lives of great men all remind us we can make our lives sublime" எமது வாழ்க்கையை உயர்வடையச் செய்யலாம்; சிறந்ததாக ஆக்கலாம் என்பதையே பெரியோருடைய வாழ்க்கை வரலாறுகள் நமக்கு நினைவுறுத்துகின்றன" என்கின்றார் அப்பேரறிஞர். இந்த அறிவுரையை மனத்துட் கொண்டு மகாத்மா காந்தியின் வாழ்க்கையை ஆராய்ந்து படிப்பதால் மக்கள் அடையும் நன்மைகள் பல

மந்திரத்தால் மாங்காய் விழுத்தலாம் என்கின்ற நம்பிக்கை மறைந்து வருகின்ற காலம் இது. தெய்வ நம்பிக்கை மக்களிடம் இப்போதும் காணப்படுகின்றதாயினும் புராணங்களில் கடவுள் செய்த திருவிளையாடல்களை நம்ப மறுக்கின்றது நமது 'பகுத்தறிவுள்ளம்'. இது காலத்தின் கோலமோ அல்லது கடவுளின் "போதாத காலமோ" நானறியேன். மனிதனாகவே பிறந்து, கடவுளின் மேல் நம்பிக்கை வைத்து, மனிதப்பண்புகளுடன் மனிதர்களிடையே மனிதனாக வாழ்ந்து, தன் சொந்த முயற்சியால் செயற்கரும் செயல்கள் புரிந்து மகாத்மா ஆகிய காந்தியடிகளை இந்தப் "பகுத்தறிவு உள்ளங்களும்" போற்றுகின்றன; "மூட பக்தி" படைத்தோரும் போற்றுகின்றனர். இந்தப் பாரிலுள்ள மக்கள் அனைவருமே போற்றிமகிழ்கின்றனர்.

வள்ளுவன் தன்னை உலகினுக்கேதந்து வான் புகழ் கொண்டது தமிழ் நாடு.

ஆசிரியர் ஸ்ரீ சி. சரவணபவன் B. A.

அந்த வள்ளுவன் வகுத்த வாழ்க்கையை வாழ்ந்து காட்டி வையகமும் வானகமும் ஒருங்கே புகழப்பெறும் பேற்றைப் பெற்றார் காந்தியடிகள். அன்பு தொண்டு, அறம்-தவறாத-வீரம், அஹிம்சை, சத்தியம் என்பவற்றின் துணையுடன் இன்று அனைவரது உயர்ந்த மதிப்பையும்பெற்றுப் புகழுடம்புடன் வாழ்கின்றார் அப் பெரியார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர் காந்தியடிகள். வாழ்க்கையின் அடிப்படையாகிய அறிவு, முயற்சி ஊக்கம், சுய நம்பிக்கை, தேச பக்தி, தெய்வ பக்தி ஆகியவை அவரிடம் ஒருங்கே பொருந்தி இருந்தன. காந்தி அடிகள் வாழ்க்கையில் வெற்றி அடைந்ததற்கு இவைதான் காரணம்.

"அன்பினால் உலகினை ஆளலாம்" என்று கன்வு கண்டு அதை நனவாகவும் ஆக்கியவர் காந்தி அடிகள். அணுக்குண்டு, சலவாயுக்குண்டு, என்ற அபாயகரமான குண்டுகளைத் தயாரித்து உலகையே ஒரு கணத்தில் அழித்து விடுவோம் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் மேற்கு வல்லரசுகள் கூட, காந்தியடிகளின் சொற்களுக்குக் கட்டுப்பட்டு நடந்தனரென்றால் அவரது அன்பின் சக்தியை என்னென்பது! வட்ட மேசை மகாநாட்டில் பங்குபற்றுவதற்காக இங்கிலாந்து சென்ற காந்தியடிகளைக் கண்டு "அரை நிர்வாணப் பக்கிரி" என்று பழித்த சர்ச்சில் அவர்களே, காந்தியடிகள் இறந்த செய்தியைக் கேட்டவுடன் கண்ணீர் விட்டுக் கதறினாராம்.

உண்மை அழிவில்லாதது என்ற உறுதி காந்தியடிகளிடம் இருந்தது. உண்மையே உலகை ஈடேற்றும் என்று உறுதியாக நம்பினார். அதைப் பரிசோதித்துப் பார்க்கத் தம் வாழ்க்கையையே தேர்ந்தெடுத்தார். ஆம்! அவர் சத்திய வாழ்க்கையில் சோதனை நடத்தினார். அவர் வாழ்க்கையே ஒரு "சத்திய சோ

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Visit
GOLD HOUSE
For Jewels
எல். கே. எஸ் பிரதர்ஸ் தங்க மாளிகை
PHONE 161 GRAMS: JEWELLERS

பொழும்பில் துக்க தினத் தீர்மானம்

வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் வித்துவான் வ. மு. கனகசுந்தரம் அவர்கள் தலைமையில் ஈழத் தமிழ்க் கழகக் கூட்டுமன்ற ஆதரவில் மொழிப்பிரச்சனை மகாநாடு நடைபெற்றது.

இம் மகாநாட்டில் சுதந்திர தினம் துக்க தினமாகக் கொண்டாடப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. ஸ்ரீமான்கள் எஸ். ஜே வி. செல்வநாயகம், ஜீ. ஜீ. பொன்னம்பலம், வி. குமாரசாமி முதலிய பலர் பேசினார்கள்.

சிங்களக் கட்சியார் சொல்லுவதுபோல் ஈழ நாட்டில் தமிழ்மக்கள் குறைந்ததொகையினரல்ல என்றும் சுவிற்சர்லாந்துமுறையில் ஆட்சிமொழிகள் அமையலாமென்றும் எடுத்துக் காட்டப்பட்டது.

—0—

அரசியல் வலை:

வழக்கறிஞர்கள் வழி காண வழியில்லையா?

போட்டியில்லாத் தேர்தல்மேடையிலே பொதுவுடைமையினரின் பொறி

மொழிப் பிணக்குக்கு ஒருவழி காணலாம் என்று வழக்கறிஞர்கள் கூடினார்கள். கூவியழைந்தார்கள் பாராளுளுமன்றத்து அங்கத்தவர்களை. அன்னார் வந்து இரகசிய மாநாட்டிலே தங்கள் உள்ளக்கிடக்கையைப் பரகசியப்படுத்தினார்கள்.

ஒழுபொழுதுமே தோல்விக்கு உடம்பாடில்லாத வழக்கறிஞர்கள் உள்ளூர்ச் சபை அங்கத்தவர்களை உசாவினார்கள். அவர்களும் ஒலிபெருக்கி வலி கெடக்கூடிய வகையிலே பிரிவினையைப் பெருவினையாக்கி விட்டகன்றனர். ஆனால் வழக்கறிஞர்கள் இன்னமும் களைப்புறவில்லை.

இவ்விரு மாநாடுகளிலும் உண்மையாக உருவானது ஒன்றுதான். தலைமை வகித்த திரு. குலசிங்கம் அவர்களைப் போலச் சித்தத்தெளிவுள்ளவர்களாகத் தலைவர்கள் இருப்பார்களேயானால் ஒற்றுமை உடம்பாடு உள்ளபடியாக உண்டாக்கப்படலாம் என்பதே.

இந்திய தேசிய மாநாடு போன்று தமிழ் பேசும் மக்கள் மாமன்றம் ஒன்று நிறுவி அதன்மூலம் எதிர்ப்பு இயக்கத்தை நடத்துவதே திரு. குலசிங்கம் அவர்களதும் வழக்கறிஞர் செயற் குழுவினர்களதும் [illegible] பற்றி ஏதும் சொல்லுவார்களோ பாராளுமன்றப் பிரதிநிதிகள் அல்லது உள்ளூர்ச் சபை அங்கத்தவர்கள் என்றால் அவர்கள் பாதையைவிட்டு இறங்கிப் பழைய புண்ணுக்கு புதிய புளிப் போடுவதில் ஈடுபட்டார்கள்.

போட்டியில்லாத் தேர்தல்

ஒற்றுமை முன்னணிகள் எல்லாம் முன்னணியில் வைத்து உழைப்பது தேர்தலிலே போட்டி தவிர்க்கும் நோக்கத்தையே. இந்தவிதமாகப் போட்டியில்லாத் தேர்தல் மேடையைக் கட்டி எழுப்பிக்கொண்டு பலர் முயன்றுவரும் வேளையிலே மேடைக்குக் கீழே பொறிக் கிடங்கு ஏற்றுகின்றார்கள் பொதுவுடைமையினர் என்று முன்னணி முயற்சியாளர்கள் அறியாதிருப்பது நூதனமே. பொதுவுடைமையினர் மட்டுமன்று சமசமாசக் கட்சியினரும் எவ்விதத்திலும் போட்டியிடுவார்களாம். பின் எதற்காக முன் அணி தேடுகிறார்கள் ஏனைய கட்சியினர் என்று திரு. பொதுசனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்.
வாழக அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம்அரனாமமே
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

யாழ். மன்மத ௵ தை ௴ உ௧௨ வெள்ளிக்கிழமை

அடிமை நிலையில் ஆநந்தமேது.....?

ஒரு நாடு விடுதலையடைந்துவிட்டால் மக்கள் மனக்களிப்புக் கொள்ளுதல் மரபே. ஆனால் விடுதலையென்ற மொழியின் உண்மை அநுபவத்தை உணர்ந்த பின்னரே மக்கள் உள்ளத்தில் உவகை இயல்பாக ஊற்றெடுக்கும்.

ஈழநாடு பல நூற்றாண்டுகளாக அந்நியரின் ஆதிக்கத்திலுழன்று தெய்வச் செயலாக எட்டாண்டுகளுக்கு முன் அந்த அடிமைத் தளையினின்றும் விலக நேரிட்டதென்பது உண்மையே. புறநாட்டவர்களின் பொறுப்பு நீங்கும் பொழுது உள்நாட்டு மக்கள் ஒருங்கு உருவாக்கிய ஒரு ஆட்சிமுறை நிறுவப் பெறுதல் வேண்டும் என்பது அரசியல் ஞானம் இல்லாதவர்களும் ஒப்புக் கொள்ளவேண்டியதொன்று. ஆனால் ஆங்கிலேயர்கள் தாமாகவே அகன்ற பொழுது இலங்கைக்கு ஒரு ஆட்சித் திட்டத்தை உதவிச் சென்றனர். அத்திட்டமோ எண் தொகையிற் கூடுதலாகவுள்ளவர்களின் நல்லெண்ணத்தையும் நேர்மை நெறியையும் அடிப்படையாகக்கொண்டதாயும் சிறுபான்மையினர்களின் உரிமைகள் இவை எனக் குறிப்பிடாததாயுமாகக் அமைந்தது. அரசாங்கசபை ஆட்பலத்தால் அங்கீகாரம் பெற்றது. இவ்வாறாகியும் எட்டாண்டுகளாக இத்திட்டம் செய்கைவகையிலே கொணரப்பட்டவகையிற் சிறுபான்மையினர் சஞ்சலமும் சந்தேகமுங் கொள்ளும் முறையிலும் பெரும்பான்மையோரின் நல்லெண்ண நன்னெறிகடுகளவும் இல்லாதவாறும் அரசாங்க அலுவலகளும் சமூக சேவைகளும் நடைபெற்றுவந்து அண்மையிலே வெளிப்படையான விபரீத வேற்றுமையும் உண்டாகிவிட்டது. எனவே இந்நாடு விடுதலை அடைந்துவிட்டது என்று மக்கள் அனைவரும் எண்ண முடியாத வகையிலே வகுப்புவாத மனப்பான்மையிலே சீர்கேடு ஏற்படலாயிற்று. இனத்தை இனம் இடுக்கண் செய்யும் இறுமாப்பில் 'விடுதலை' என்பது உண்மையாகுமா? மொழியை மொறி அழிக்கும் மூர்க்க நெறியிலே சுதந்திரம் என்றால் உலகம் ஒப்புக் கொள்ளுமா? ஒரு சாராரின் உரிமைகளை மறுப்பதுமன்றி அவர்களுக்கு அடிமைத் தளை பூட்டத் தீவிர ஆயத்தம் செய்தல் மக்களாட்சியாகுமா?

தமிழ்பேசும் மக்கள் அடிமை அந்தகாரத்தை யகற்றி விடுதலை வெளிச்சத்தைக் காணவில்லையே. தொன்றுதொட்டு ஈழத்திலே அரச ஆதிக்கஞ் செலுத்தி வந்த ஒரு இனம் அந்நிய ஆட்சியை அகற்ற அருமுயற்சி செய்த ஒரு இனம் உலகப்பண்பாட்டுக்கே பெருமை அளிக்கக் கூடியசால்பு நிறைந்த ஒரு இனம் அடிமைநிலையில்மொழிப் பெருமை பறிபோகும் நிலையில், நிலஉரிமை இழக்கும் நிலையில், விடுதலைபெற்ற இனம் என்று எவ்வாறு எண்ணுதல் முடியும். நயவஞ்சகமும் சுயநலமும் இனவெறியும் உள்ள நாட்டிலே ஆட்பலத்தால் ஒதுக்கப்படுபவர்களைச் சுதந்திர உணர்ச்சி கொள்ளுங்கள் என்று கூவியழைப்பவர்கள் தங்கள் இதயங்களை ஆராய்ந்து பார்ப்பாராக. வேடம் போட்டுப் போலித் தோற்றம் காட்டும் இனம் அல்ல தமிழ் பேசும் மக்களின் இனம். உண்மையை மறைத்து உள்ளக்கிடக்கையை வேறுபடுத்திக்காட்டும் மக்கள் அல்ல தமிழ்பேசும் மக்கள்; உண்மை ஒழுக்கத்தினாலும் உயரிய பண்பாட்டினாலும் செம்மை நலச்சீரினாலும் உலகவரலாற்றிலே இடம்பெற்ற சால்பையுள்ள தமிழ்பேசும் இனம் தன்மானத்தை இழக்கமாட்டாது. தங்கள் மொழி தங்கள் பண்பு தங்கள் இடம் தங்கள் உரிமை ஆகியவற்றைப் பெறும் வரைக்கும் தமிழ்பேசும் மக்கள் தவமிருந்து முயல்வார்களேயன்றி போலிமுகமலர்ச்சியும் பொய்வேடமும் போட ஒரு பொழுதும் உடம்பாடாகமாட்டார்கள்.

ஒற்றுமை உருவாகின்றது

ஒற்றுமை முன்னணி அமைக்கும் தொண்டில் ஈடுபட்டவர்கள் பயன் பெற்று விட்டார்கள்என்று அறிந்து ஆறுதலடைகின்றோம். இனத்துக்கு இடுக்கண் வந்துற்ற காலையிலும் ஒற்றுமை உருவாகமாட்டாதென்றால் அந்த இனம் உலகப் பழிமொழிக்கேயாளாய் விடுமன்றோ? எனவே முதற்கண் வேண்டப்படுவது வேற்றுமையை விலக்குதலே. இது ஒருவாறு கை கூடி விட்டதெனினும் இடதுசாரிக் கட்சிகளின் ஒற்றையாட்சி முறைக்கொள்கையும் புரட்சி மனப்பான்மையும் ஓரளவுக்கு வேற்றுமையை விளைவிக்கும் என்பதைநாம் மறந்து விடுதல்கூடாது.

தேவகோட்டத்தில் தமிழ்த்திருநாள்

சம அந்தஸ்து அல்லது தனி இராச்சியம்

ஏகமனதான தீர்மானங்கள்

தமிழ் நாட்டில், தமிழ் மக்களால், "தமிழ்த்திருநாள்" தை மாசம் 1-ம் திகதி (14-1-56) சனிக்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில் "தேவதோட்டத்தில்" யாழ்ப்பாணம் கமக்காரர் சங்கத் தலைவர், ஊழியன் நர. சேனாதிராசா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

அவர் தமது தலைமை உரையில் "இற்றைக்கு (23) இருபத்துமூன்று வருடங்கட்குமுன், வெள்ளையர்கள் ஆட்சியில் இலங்கை இருந்தபோது திருவடி நிலை என்னும் திவ்விய ஸ்தலத்தில், 500 வாலிபர்கள் புடைசூழக் கொடி ஏற்றுவிழாவை நடாத்தினேன். சுயராச்சியம் பெற்றபின், இன்று இங்கே இந்தத் தமிழ்த்திருநாளில், எம்பெருமான் சந்நிதியில், இக்கொடியை ஏற்றி வைக்கின்றேன். இந்தப் பெருமை தமிழ்ப்பேசும் மக்களாயும், கமக்காரராயுமுள்ள உங்கட்கே உரியது என்று சொல்லி, கொடியை ஏற்றி வைத்தார் திரு. சேனாதிராசா. "தமிழ்ப் பேசும் மக்களே, எம் சகோதரர்களே, இங்கே நாம் கூடியிருக்கும் நோக்கம் இதற்குமுன் ஒருகாலமும் இலங்கைத் தமிழ்நாட்டில்—நடந்திராத "தமிழ்த் திருநாள்" கொண்டாட்டத்தைக் கொண்டாடுவதாகும். தமிழ்ப்பேசும் மக்களல்லாத மற்றும் சமூகத்தினரும், சமயத்தினரும், தங்கள், தங்கள் திருநாட்களைக் கொண்டாடுகிறார்கள். கடவுட்பக்தியிலும் அறிவின் முதிர்ச்சியினும், சீர்திருத்தத்திலும் மேம்பட்டு, வாழ்க்கை நடாத்திய தமிழ்மக்களின் வழித்தோன்றலகளாயுள்ள நாம், ஏன் "தமிழ்த் திருநாளாக" இந்நாளை வருடந்தோறும் கொண்டாடப்படாது? எங்கள் விதியாலும், சுய நிர்ணயமில்லாத தன்மையாலும், எந்த நல் விஷயத்திலும் முன்னணியில் நிற்கவேண்டிய சாகியத்தாரான தமிழ்பேசும் மக்கள் இன்று சோர்வடைந்து செய்வதொன்று மறியாது நிற்கின்றோம். ஒற்றுமையில்லாத் தலைவர்களின் மயக்கவழியில் நிற்பதால் தமிழ்மொழிக்கும், சமயத்திற்கும். பெரும்பான்மையினரான சிங்களவரின் குருமாரும், சிங்கள அரசியல் தலைவர்களும் முடிவுகட்ட முற்பட்டு விட்டனர், இலங்கையின் தற்கால அரசியல் உயர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் மூலகாரணமாயிருந்தவர்கள் தமிழ்த்தலைவர்களே.

எங்கள் தமிழ்த் தலைவர்கள் செய்ததை மறந்து, இன்றைக்கு எங்கள் மொழிக்கும், சமயத்திற்கும் அழிவு செய்தற்கு சிங்களத் தலைவர்களும், புதத குருமாரும் கங்கணம் கட்டி நிற்கிறார்கள். தமிழிற்குச் சம அந்தஸ்து இல்லாவிட்டால் தமிழ்பேசும் மக்களும், தலைவர்களும் எல்லா விதத்தியாசங்களையும் மறந்து, ஒற்றுமையாய் நின்று நாட்டைப் பிரித்து, எங்கள் இராச்சியத்தை நாங்களே ஆளவேண்டும். இப்போது இருக்கும் நிலையில், சம அந்தஸ்துத் தந்தாலும் சுகமில்லை. ஏன் என்றால், எங்கள் பிள்ளைகளுக்கு இனிமேல் உத்தியோகம் கிடையாது. சமஷ்டி அரசியலாலும் இனிமேல் சுகமில்லை. சம அந்தஸ்துத் தராத சிங்கள இராச்சியம், சமஷ்டி அரசு தந்தாலும் மத்திய அரசாங்கத்தில் தமிழை வையாது. அதுவுமல்லாமல், எங்கள் எஸ்லாத் தேவைகட்கும், மத்திய அரசாங்கத்தை எதிர்பார்க்க வேண்டும். ஆனதால் சமஷ்டியும் வேண்டாம். "பாக்கிஸ்தான் மாதிரி" "தமிழ்நாடே வேண்டும்" என்று தொடர்ந்து பேசும் போது கூறினார். பின்பு, திரு. அ. தியாகராசா M.A. அவர்கள் சொற்பொழிவாற்றினார் அவர் பேசும்போது "பெல்ஜீயத்தில், சுவிற்சர்லன்தில், கனடாவில், மலாயாவில அரசகரும மொழிகளாக மூன்று நாலு பாஷைகள் ஏற்பட்டிருக்கின்றன. இலங்கையில் இரண்டே இரண்டு பாஷைகள்தான், அப்படி இருந்தும் சிங்கள அரசாங்கம் தமிழுக்குச் சம அந்தஸ்து இல்லை என்று முடிவு கட்டிவிட்டது. ஆனதால்தமிழ் பேசும் மக்கள் சிங்களவரை விட்டுப் பிரிந்து, தமிழ்நாட்டு அரசியல் உண்டாக்கி பிற்சந்ததி தொந்தரவில்லாது வாழச் செய்ய வேண்டும் என்று கூறினார். திரு, நவரத்தினம் M.A. அவர்கள் பேசும் போது "எந்தக் காலத்திலும் இப்படிப்பட்ட கஷ்டங்கள் ஏற்படுவதுண்டு. அக் காலங்களில் கடவுளைப் பிரார்த்தித்து அவரின் அருளைப் பெறுவதுண்டு. அப்படியே தமிழ் பேசும் மக்களாயுள்ள நாங்கள் இப்போதும் இடையறாத் தியானமும், பிரார்த்தனையும் செய்து கடவுளின் அருளைப்பெற்று எங்கள் மொழிக்கும் சமயத்திற்கும் அழிவு ஏற்படாது செய்யவேண்டும் என்று கூறினார். அதன்பின்னர் பிரம்மஸ்ரீ சண்முகரத்தினசர்மா அவர்களும் பண்டிதர் ஆறுமுகமும் பேசினார்கள்.

தமிழுக்குச் சம அந்தஸ்து அல்லது தனித்தமிழ் இராச்சியம் என்னும் இருபிரேரணைகளும் ஏகமனதாக நிறைவேற்றப்பெற்றன.

முடியரசும் குடியரசும்

—:0:—

அறவாழ்வுக்கேற்ற சனநாயகம் வேண்டும்

இக்கால அரசியலில் ஏற்படும் அலங்கோலங்கள் முற்கால அரசியல் முறையைப்பற்றி நினைக்கச் தூண்டுகிறன. "கற்காலம்" என்று மேனாட்டார் தங்கள் சரித்திர ஆரம்பத்தைத் தொடங்குமுன்னரே இந்தியாவிலே தமிழர்கள் தமக்கென ஒரு அரசியலை வகுத்து நாகரீகமடைந்த வாழ்க்கையை நடத்தினர் என அறிகிறோம். அவர்களின் அரசியல் முறையில் அரசன் தலைமை வகித்தான். அதாவது முடியாட்சி நடந்து வந்தது. முடியாட்சி என்பது சர்வாதிகார ஆட்சி என இக்காலத்தில் கருதுகிறார்கள். ஆனால் உண்மையில் அப்படியல்ல. பெரும்பாலார் தங்களுக்குப் பெரியோர்களால் வகுக்கப்பட்ட அறநெறிகளைக் கைக்கொண்டே ஆட்சி புரிந்து வந்தார்கள். ஒரு அரசன் சிறந்த வீரனாக இருக்கலாம். பெரும்படையைவைத்திருக்கலாம். அவன் நினைத்ததையெல்லாம் செய்து முடிக்கும் ஆற்றல் வாய்ந்தவனாக இருக்கலாம். அவன் நீதி வழியில் செல்லாவிட்டால் அவனுடைய மற்றைய குணங்கள் எல்லாம் பாழாய் விடும்.

அரசியல் இலக்கணம் வகுத்த வள்ளுவரும் கலவி, அஞ்சாமை, அறிவு ஊக்கம் இவற்றைக் கூறிக் கொண்டு வந்து ஆட்சி முறைக்குரிய அறத்தில் தவறக்கூடாதென வற்புறுத்திக் கூறியுள்ளார்.

அரசன் நீதிதவறக்கூடுமாயின் அவனை இடித்துரைத்து நல்வழிச்செலுத்தக் கற்றறிந்த மந்திரிமார் இருந்தார்கள். இவர்கள் நீதியையேவிடாதுரைக்கும் மரபினர். பெரும்பான்மை மக்களின் கருத்தல்ல இவர்கள் கூறுவது. அது உலகக்கருத்து. "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு" என இலக்கணம் வகுத்தனர். கற்றறிந்தோர் பிழை

ஸ்ரீ வ. குகசர்மா

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நேயர்கள் நெஞ்சம்

சுதந்திர நாளில் எங்கள் கடமை

சுதந்திர தினம் தமிழ்ப் பேசும் மக்களுக்கு ஓர் துக்க தினமாகவும், அதைப் பகிஷ்கரிக்க வேண்டுமெனவும் தமிழ் பேசும் மக்களிளிடையே அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அன்றைய தினம் அனுஷ்டிக்கவேண்டியவை எவை எவையென மக்கள் யோசனைக்கும் அங்கீகாரத்திற்கும் கீழே தருகிறேன்,

மகாத்தமா காந்தி தனது அரசியல் வாழ்வில் தெய்வீக சக்தியைப் பெற்றே பெருமுயற்சிகளையும் இயக்கங்களையும் நடாத்தி முடித்தார். ஆத்ம சக்தியால் முடியாததொன்றில்லை. ஆத்ம சக்தி அணுக்குண்டிலும் பார்க்கக் கூடிய சக்தியுடையது. தன்னில் ஆத்ம சக்தி குறையக் கண்டால் காந்தியடிகள் உண்ணாவிரதம் இருந்து, தியானத்தாலும் செபத்தாலும் ஆத்ம சக்தியை விருத்தி செய்து கொள்வார். பலகோடி மக்கள் கூடிச் செய்யும் தியானத்தாலும் செபத்தாலும் ஆத்ம சக்தியை விருத்தி செய்து கொள்வார். பலகோடி மக்கள் கூடிச் செய்யும் தியானத்தாலும்செபத்தினாலும் பிறக்கும் ஆன்ம சக்தியின்பலம் அளவிடற்கரியது. எனவே சுதந்திர தினத்தன்று ஊர்வலம், ஆர்ப்பாட்டம், கண்டனக் கூட்டங்கள் முதலியவைகளைத் தவிர்த்து, தமிழ் பேசும் மக்கள் அனைவரும், எல்லா மதத்தினரும் ஆண் பெண் இருபாலாரும் தத்தம் தொழில்களை நிறுறுத்தி அன்று முழுதும் பொதுவாகத் தமிழ் பேசும் மக்கள் நலன் கருதியும், சிறப்பாகத் தமிழ் மக்களின் அரசியல் முன்னேற்றத்திற்காகவும், கடவுள் வழிபாடு, தியானம், செபம் செய்ய வேண்டும். அத்துடன் உண்ணாவிரதமிருந்து தியானங்கள் செய்யின் அதிக பலன் கிடைக்கும் என்பது உண்மை.

தத்தம் சமயக் கோவில்களிலும், பள்ளிவாசல்களிலும், சமயச்சார்பான சபா மண்டபங்களிலும் அந்தந்த ஊர்களிலுள்ள மக்கள் ஒருங்குகூடி, கூட்டு வழிபாடு செய்வது உத்தமம். இதனால் ஆத்ம சக்தி பன்மடங்கு அதிகரிக்கும். மாறி மாறி நிகழ்ச்சிகள் நடைபெறவேண்டும். அப்படியானால் உடலுக்கிளைப்பு வரமாட்டாது. ஒரு பகுதியினர் ஓய்வுபெற மற்றொரு பகுதியார் இடையூறின்றிச் செபத்தைத் தொடர்ந்து நடத்தலாம். எனவே 24 மணித்தியாலமும் தியானம், செபம் தொடர்பாக நடந்து கொண்டிருக்கும். இத்தகையஒழுக்க முறை நாள்தோறும்தோலகட்டிக்கத்தோலிக்க ஆச்சிரமத்தில் நடைபெற்று வருகின்றது. பொதுத் தலங்களுக்குப்போக வசதியில்லாதவர்கள் தத்தம் இல்லங்களிலுள்ள பூசையறையில் அனுட்டிக்கலாம்.

பின்வருபவையும் அன்று செய்ய வேண்டியவையாகும்.

(அ) இல்லங்கள், கடைகள், சந்தைகள், சபாமண்டபங்கள், படமாளிகைகள், கோயில்கள், தொழிற்சாலைகள மற்றும் பொதுத் தாபனங்களின் முன்றில்களில் கறுப்புக் கொடி பறக்க விடுதல்.

(ஆ) கடைகள் சந்தைகள், தொழிற்சாலைகள் மூடப்படுதல்.

(இ) படக்காட்சி நிறுத்தப்படுதல்.

(ஈ) தவிர்க்க முடியாத அவசிய கருமத்துக்கன்றிப் போக்கு வரத்து நிற்பாட்டல்

(உ) அரசினரால்நடத்தப்படும் சுதந்திரதினக்கொண்டாட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் பங்கு பற்றாதிருத்தல்.

(ஊ) ஆலயங்களில் அரசினர் கட்டளைப்படி மணியடியாமல் இருத்தல்.

(எ) பள்ளி மாணவர் சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளாமல் பெற்றோர் தடுத்தல்.

(ஏ) மாணவ மாணவிகளும் பெற்றோருடன் வழிபாட்டிலும் செபத்திலும் பங்குபற்றல்.

வீடு வீடாய்ச் சென்று மேற்படி ஒழுங்குகளை அனுஷ்டிக்குமாறு மக்களைத் தூண்டிப் பிரசாரம் செய்யவேண்டும். இதற்குத் தொண்டர்கள் பெரும் தொகையினர் தேவைப்படும். அரசியல் தலைவர்கள் பாராளுமன்ற அங்கத்தினர், பலதிறப்பட்ட அரசியல் கட்சிகளின் வாலிபர் சங்கங்கள், மங்கையர் கழகங்கள், நகர கிராமச் சங்கங்கள் இப்பிரசாரத்தில் ஈடுபட்டால் இம் முயற்சி மிக இலகுவாகக் கைகூடும் என்பதிற் சந்தேகமுண்டாக இடமில்லை.

'ஓர் தமிழன்'

சைவ ஒழுக்கம்

திருவைந்தெழித்துடன் திருநீறணிதல்

சிவபுராணம் கூறப் புகுந்த மணிவாசகப் பெருமான் மனிதரின் பல்வேறு வகைத்தாய பிறவிகளைக் கூறியுள்ளார். புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி.....என்று தொடங்கி, மனிதராய்த் தேவராய் என முடிக்கும் இச்சிறு பகுதியில் மனிதப் பிறவியின் மேன்மை

ஆனைப்பந்திச் சைவன்

யையும் அறியத்தந்தார். உலகில் அரியது எதுவென அறியத்தந்தார். உலகில் அரியது எதுவென அறியத்தந்த ஔவைப் பிராட்டியாரும் "அரிதரிது மானிடராதல் அரிது; அதனினும் அரிது கூன்குருடு செவிடு பேடு நீங்கிப் பிறந்த காலையும் ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது. ஞானமும் கல்வியும் நயந்தகாலையும் தானமும் தவமும் தான் செய்தல் அரிது. தானமும் தவமும் தான்செய்வராயின் வானவர் நாடு வழிதிறந்திடுமே" எனவும் கூறியுள்ளார். இப்படியான பெறற்கரும் மானிடப் பிறவியை எடுத்த நாம் அனைவரும், அவரவர் சமய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு ஒழுக வேண்டியது கடனாகும்.

பிறப்பொழுக்கங் கூறவந்த வள்ளுவப் பெருந்தகையார், "மறப்பினும் ஒத்துக்கொள்ளாகும், பார்ப்பான் பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்" என்று கூறினார். பிறப்பொழுக்கம் கெட்டால் யாவும் நீங்கி விடும்.

சிவபெருமானை வழிபடும் மாந்தர் அனைவரையும் "சைவர்கள்" என்ற பெயரால் அழைப்பதை நாம் கேட்டுவருகிறோம், அவர்களுக்குரிய விதிமுறை ஒழுக்கங்கள் பல இருக்கின்றன. ஆனால் வழிபடும் முறையில் சில ஒழுக்கங்களைக் காணவேண்டும். இன்று சிறுவர் முதல் முதியோர் ஈறாக எல்லோரும் "சைவ ஒழுக்கம்" என்றால் என்ன என்ற வினாவைக் கேட்டு வருகின்றனர். சைவ ஒழுக்கங்களுள் இன்றியமையாதது திருநீறு அணிதலாகும். அதனை அணியும் போது சிவபெருமானை நினைத்தலும், திருவைந்தெழுத்தை உச்சரித்தலும் பிரதானமாகும்.

கருவாய்க் கிடந்துன்
கழலே நினையும்
கருத்துடை யேன்
உருவாய்த் தெரிந்துன்றன்
நாமம் பயின்றேன்
உனதருளால்
திருவாய்ப் பொலியச்
சிவாய நமவென்று
நீறணிந் தேன்
தருவாய் சிவகதிநீ
பாதிரிப்புலி யூரானே.

என்று கூறியுள்ளார் அப்பர்.

திருவைந்தெழுத்தை ஆறுதலாகவும், அமைதியாயும், அன்புடனும் ஓதவேண்டும்.

"காதலாகிக் கசிந்து
கண்ணீர் மல்கி
ஓது வார்தமை
நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும்
மெய்ப்பொருளாவது
நாதன் நாமம்
நமச்சி வாயவே."

என்னும் தேவாரம் இதனை அறிவுறுத்துகின்றது.

சிவபெருமான், உமாதேவியார், விநாயகர், வைரவர், வீரபத்திரர், சுப்பிரமணியர் ஆகிய மூர்த்திகளுள் ஒன்றிலேபற்று வைத்து நாள்தோறும தியானஞ் செய்து தோத்திரஞ் சொல்லி வணங்குதல் வேண்டும்.

நாம் மெய்ப் பொருளாகிய கடவுளை அடைந்து பேரானந்தப் பெருவாழ்வைப் பெறுதற்கு இதுவே வழியாகும்,

சைவத் திருமடங்கள் அமையவேண்டிய ஒழுங்கு

நாவலர் அவர்கள் வகுத்த விதி

நமது ஈழநாட்டிலே பல புண்ணிய தங்களிருக்கின்றன. இப் புண்ணிய தலங்களின் விசேட உற்சவ காலங்களில் திரள் திரளான மக்கள் ஆலயத்திற்கு வருகிறார்கள். இவர்களிற் பலர் தங்கிச் செல்வதற்காகச் சில புண்ணியவான்கள் மடங்களைத் தாபிப்பதுமுண்டு. அதற்குச் சில நிபந்தனைகளை ஏற்படுத்தி விடுவதுமுண்டு. இந்த வகையில் தோற்றும் மடங்கள் ஒரு சிலவாகும். இன்னொரு வகையில் துறவுக்கோலங் கொண்ட

தென்மயிலை
திரு. செ. கோவிந்தசாமி

ஒரு சிலர் ஆச்சிரமம் என்றோ மடம் என்றோ பெயர் சொல்லிப் பொது மக்களிடம் பணம் சேர்த்து அந்தப் பணத்தைக் கொண்டு மடத்தைத்தாபிப்பார்கள். அந்த மடத்திற்குப் புகழ்பெற்ற பெரியார்களின் விலாசத்தையும் பொறித்துவிடுவார்கள். மடமும் ஒருகையில் நடைபெற்று வருகிறது.

மடநிர்வாகிகளுக்கு மடம் என்றால் என்ன—மடத்தில் நடைபெறவேண்டியன என்ன — மடநிர்வாகி எப்படி இருத்தல் வேண்டும்— எப்படி நிர்வாகம் செய்ய வேண்டும் என்ற விதிமுறைகள் செவ்வனே தெரிந்திருத்தல் வேண்டும். இவை பற்றி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் எங்களுக்கு அருமருந்தாக எழுதித்தந்த நான்காம் பால பாடத்திலிருந்து ஒருசில பொன்னுரைகளைத் திரட்டி இங்கே கூறுவோம்.

"மடமாவது, பெரியோர்கள் இருந்து கல்வியறிவு ஒழுக்கத்தையும் சமயத்தையும் வளர்த்தற்கு உரிய இடமாம். மடத்திலே, செபம், பூசை தியானம் முயலியவற்றிற்கும், வேதாகமத் திருமுறைகளை வைத்துப் பூசை செய்வதற்கும் வேதாகமங்களைப் படிப்பித்தல் கட்கும், சமையல் போசனம் முதலியவற்றிற்கும், பரிசாரகர் அதிதிகள் இருத்தற்கும் வெவ்வேறு இடங்கள் விதிப்படி கட்டப்பட்டிருத்தல் வேண்டும். மடத்தைக் கட்டுவித்தவரும், மடத்திற்குப் பொருள் உபகரித்தவர்களும், கீலமான மடங்களைப் புதுக்குவித்தவர்களும், கடவுளுடைய உலகத்தை அடைந்து இன்பம் அநுபவித்து வாழ்வர்.

கருவிநூல்களையும்வேதாகமங்களையும் நன்றாகக் கற்றறிந்தவரும், சீவகருணை பக்தி வைராக்கியம் ஞானம் என்னும் நான்கும் உடைய வருமாகிய ஆசாரியரே மடாதிபதியாவதற்கு யோக்கியர். மடத்தைப் பரிபாலனம் செய்பவர்கள் கிருகாச்சிரம துறவிகளாய் இருந்தாலும்சரி — பிரமச்சரிய துறவிகளாய் இருந்தாலும் சரி நித்திய கருமவிதி முதலியனவற்றைத் தவறாமல் செய்தல் வேண்டும். வேதாகமத் திருமுறைகளைப் பூசைசெய்யது படிக்க வேண்டும். கன்ம யாகம், தபோயாகம், செபயாகம், தியானயாகம், ஞானயாகம் என ஐவகை யாகங்களையும் செவ்வனே அநுட்டித்தல் வேண்டும்.

தேதாகமத் திருமுறைகளுக்கு ஆடிப் பூரணையிலும் வைகாசிப் பூரணையிலும் விசேட பூசை செய்தல் வேண்டும். மடாதிபதி தமமிடத்தே கற்கும் மாணாக்கர்களுக்கும், துறவிகட்கும் வறியவர்கட்கும் அன்னம் வஸ்திரம் முதலியன கொடுத்து சிறிதும் பட்சபாதமின்றிப்பெருங்கருணையோடு நடத்தல் வேண்டும். தமக்கு அவர்கள் யாதாயினும் குற்றம் செய்தால் பெற்றதாயினும் பதின்மடங்கு இனியராய் ஒழுகல் வேண்டும். பழிபாவங்கட்கு சிறிதாயினும் அஞ்சாது பந்தியில் தமக்கும் தம்மைச் சார்ந்தவருக்கும் உயர்வாகிய பதார்த்தங்களைப் படைப்பித்துக் கொள்ளலும் மற்றை ஏழைகளுக்குத் தாழ்வாகிய பதார்த்வங்களைப் படைப்பித்தலும், அவிவிவேகிகளும் சீச்சீ என்று வெறுக்கத்தக்க மிக இழிந்த செய்கைகளாம். இப்பந்தி வஞ்சனை கொடிது" என்பது அவர் வகுத்த வழியாகும்.

மடாதிபதிகள் தம்முடைய மாணாக்கர்களுள்ளே

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவத் திருமடங்கள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்வியறிவு ஒழுக்கங்களால் நன்கு மதிக்கப்பட்டவர்களை ஊர்தோறும் உள்ள தம்முடைய மடங்களுக்கு அனுப்பி, அவர்களைக் கொண்டு அவர்களுக்கு கல்வி கற்பிக்கவும் சமய நெறியைப் போதிப்பிக்கவும் வேண்டும். இவர்களைத்தான் சைவப் பாதிரிமார்கள் என்று சொல்லப்படும். இப்பாதிரிமார் இத்தகைய மரபுநெறி மாறாத நாவலர் சைவக்குரு மடாலயங்களிலிருந்தே தோற்ற வேண்டும். இவ்விததோற்றம் உண்டானால் அகில உலக முழுவதும் சைவம் பரிமளிக்கும் என்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானுக்குப்பின் வந்த சைவப் பெருமக்களான ஸ்ரீமத் கைலாசபிள்ளை, சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம், ஸ்ரீமத் சிவபாத சுந்தரனார் முதலாய பெரியோர்கள் நிறைவேற்ற முயற்சித்தனர். இப்போது திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையார் இக்கருத்தைப் பூர்த்தி செய்யக் கோயில் நிர்வாகத்தோடு திட்டமிட்டிருக்கிறார்கள். இந்த வகையில் மடங்கள் ஒவ்வொன்றும் திகழுமேயானால் மேன்மைகொள் சைவ நீதி எங்கும் விளங்கும். இதனைத் தாபிக்கு முன் இந்தியாவிலுள்ள மடாலயங்களைப் பார்வையிடல் வேண்டும். இந்த வகையில் இப்போது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், அம்பலவாண நாவலர்சாமி, இலக்கணம் முத்துக்குமாரத்தம்பிரான் போன்ற துறவறத்தாருக்குப் பின்னால் வந்த ஸ்ரீமத் மயில்வாகன சுவாமி அவர்களால் செல்வச்சந்நிதித் தலத்தில் நடத்தப் பெறும் ஆனந்தாச்சிரமம் சில விதிகளைத் தன்னகத்தே கொண்டு நடாத்தி வருகின்றது. இது ஒரு சைவத்திருமடமாகும். இலங்கையில் உள்ள மடங்களில் இதுவே நாவலர் கருத்தில் ஒருசிறிது அடங்கியது எனலாம். இதனைப் பெருப்பித்து நடாத்துவது சைவமக்கள் கடமையாகும். தனவந்தர்கள் தாபிக்கும் மடங்களில் சுற்றத்தார்களை மடாதிபதியாக்காது துறவறத்தாரையே மடாதிபதியாக்கவேண்டும். இது முன்னோர் முறை. இவ்வுண்மையையறிந்து கல்வியையும் சமயத்தையும் வளர்த்து முன்னோர் கருத்தை வழுவாவண்ணம் நிறைவேற்றுவதே மடாதிபதிகளுக்குப் புகழும் புண்ணியமுமாகும்.

இரத்துமலானையில்

முத்தமிழ் விழா

தமிழுக்குத் தமிழர்களே முதலிடம்கொடுக்கவில்லை!

— பண்டிதர் கா. பொ. இரத்தினம்

"நமது தாய் மொழியாகிய தமிழ்மொழிக்கு நாம் முதலிடம் கொடுத்துவிட்டோமா என்பதைத் தமிழ்மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் பிறருடைய உதவியின்றித் தமிழை வாழவைக்க வேண்டிய துறைகளில் வாழவைத்தற்குக்கூட இன்னும் ஒன்றுபட்டு செயலாற்றவில்லை. இத்தைப்பொங்கல் திருநாளில் தமிழர்களாகிய நாம் எல்லோரும் தமிழுக்கு எந்தெந்தத் துறைகளில் முதன்மை கொடுக்கலாமோ அந்தந்தத் துறைகளிலெல்லாம் முதன்மை கொடுத்தற்கு உறுதி செய்வோம். யாம் எழுதும் கடிதங்களின் முகவரிகள், தந்திக்காசுக் கட்டளை, அஞ்சற்கட்டளை முதலியவற்றை எல்லாம் நாம் ஏன் தமிழில் எழுத இன்னும் தயங்கவேண்டும். இன்றேயல்ல இனித் 'தமிழிலேயே எழுதுவதாக உறுதி செய்யுமாறு தமிழர்கள் யாவரையும் கேட்டுக் கொள்ளுகின்றேன். தமிழை வளர்க்கும் சங்கங்கள் பலவும், தமிழர்கள் நடத்தும் நிலையங்கள் பலவும் இன்றும் தமிழை ஒதுக்கி ஆங்கிலத்துக்கு முதலிடம் அளிப்பது வெட்கத்துக்குரிய செயலாகும். இந்நிலைமை இன்றே இக்கணமே மாற்றம் அடையவேண்டும். தமிழை தெய்வமென உயிரென, அமிழ்தினும் சிறந்ததென போற்றி வந்த பெருமக்களின் பரம்பரையில் வந்த நாம் தமிழை இழிவடையச் செய்வது பெருந்தகைமையாகுமா? எங்கள் தனிவாழ்வு, குடும்ப வாழ்வு, இன வாழ்வு முதலிய யாவும் தமிழின் வாழ்வையே பொறுத்துள்ளது என்பதை நம் மக்களிற் சிலர் இன்னும் உணராதிருப்பது மிக வருந்தத்தக்கதொன்று. நம் மக்களிடையே இன்னும் போதிய உணர்ச்சியும் விழிப்பும் ஏற்படவில்லை. தமிழினம் முழுவதையும் ஒன்றுபடுத்தும் தமிழ்மொழியையும், தமிழ்க்கலை, தமிழ்ப்பண்பாடு, முதலியவற்றையும் போற்றி வளர்த்தாலன்றி தமிழினம் மானத்துடன் சிறந்து வாழ்வு நடத்தல் முடியாது"

இவ்வாண்டில் எமது கழகத்துக்கு ஒரு நிலம் வாங்கி மண்டபம் எழுப்ப எண்ணியுள்ளோம். பாணந்துறை தொடக்கம் தெகிவலைவரையும் வாழும் தமிழ் மக்கள் யாவரும் எமது கழகத்தில் சேர்தல்வேண்டும். இவ்வாண்டில் ஆயிரம் உறுப்பினரைச் சேர்க்கத் திட்டமிட்டுள்ளோம் என்று மேற்படி விழாவில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் தமதுதலைமை உரையிற் கூறினார்.

புலவர்மணி அ. பெரியதம்பிப் பிள்ளை அவர்கள் பேசும்போது "இலங்கையின் வடபகுதியிலும் கீழ்ப்பகுதியிலும் ஏனைய பகுதிகளிலும் வாழும் தமிழ் மக்கள் யாவரும் ஒன்றுபட்டுத் தமிழ்மொழியை அரியாசனம் ஏற்றவேண்டும். இப்பொழுது தமிழ் இயங்கிக்கொண்டிருக்கிறது. அதனை ஆட்சி மொழியாகச் செய்தல் வேண்டும்.

நம் இனத்தில் பல தலைவர்கள் இருப்பதால் போலும் இன்னும் நம்மிடையே ஒரு சிறந்ததலைவர் தோன்றவில்லை. நாம் யாவரும் ஒற்றுமைப்பட்டு ஒரு கொள்கையுடன் நம் மொழியின் உரிமைக்குப் பாடுபடவேண்டும் என்று கூறினார்.

"ஏற்றுக உலையே ஆக்குக சோறே" என்னும் பொருள் பற்றி திரு. க. இலக்குமணன் அவர்களும் இஸ்லாமியர் தந்த தமிழ் என்பதுபற்றி பண்டிதர் மு. ஆறுமுகம் அவர்களும் பேசினார்கள். திருமதி பரஞ்சோதி அம்மாள் அவர்கள் இசை விருந்தளித்தார்கள். கொத்தலாவலை தமிழ்ப் பாடசாலை மாணவரின் நடன நிகழ்ச்சிகளுடன் விழா நிறைவேறியது.

சைவப் பிரசங்கம்

உசன் கந்தசாமி கோயிலில் 20-1-56 வெள்ளிக்கிழமை இரவு சைவப்பிரசாரகர் அராலிதெற்கு திரு. வே. கந்தையா அவர்கள் "அருட்குரு" என்னும் பொருள்பற்றி ஓர் அரிய பிரசங்கம் செய்தார்கள். கூட்டுப் பிரார்த்தனையின் பின் இன்னிசைப் பாடல்களுடன் கேட்போர் இன்புறுமாறு இது நடைபெற்றது.

இக்கோயிலில் இத்தகைய நிகழ்ச்சிகளிற் பிரபிரயோசனப்படுமாறு நிலையான ஒலி பெருக்கி ஒன்றைக் கோயில் அதிபர் வழக்கறிஞர் திரு. சி. இராசரத்தினம் அவர்கள் அமைத்திருக்கின்றார் என்பதும் இங்கேகுறிப்பிடத்தக்கது.

— கடித,

ஒளிவடிவில் கடவுள் வழிபாடு

பண்டைக்காலத் தமிழகத்திலுள்ளது

உலகில் மக்கள் தோன்றி சீர்திருந்தி வாழத் தொடங்கியபொழுது, தமக்கு மேலானதெது என்று அறியத்தொடங்கினர். ஞாயிறு, திங்கள், தீ, இம் மூன்றும் அவர்களுக்கு இறும்பூதை யளித்தன. இப் பொருள்களைத் தங்கட்கு மேலாக நினைத்து, ஒளிவடிவிலுள்ள கடவுளாக வழிபட்டனர். ஞாயிறு, திங்கள், தீ இயற்கைச் சக்திகள். தொல்காப்பியரும்,

"கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"

என்றார். (கொடி நிலை - ஞாயிறு, கந்தழி - திங்கள், வள்ளி-தீ) ஞாயிறு வணக்கத்தை - ஒளிவணக்கத்தை - பண்டைத் தமிழ் இலக்கியங்களில் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.

"திங்களைப் போற்றுதும்
திங்களைப் போற்றுதும்"
"ஞாயிறு போற்றுதும்
ஞாயிறு போற்றுதும்"
—சிலப்பதிகாரம்
"பலர் புகழ் ஞாயிறு"
—திருமுருகாற்றுப்படை.

"முந்நீர் மீமிசைப் பலர்தொழத்
தோன்றி
யேமுற விளங்கிய சுடர்"
— நற்றிணை

எனவே ஒளிவழிபாடு மிகப் பழங்காலந்தொட்டு தமிழகத்தில் நிலவிவந்துள்ளது. எமது சமய முறையில் இறைவனைச் 'சிவன்' 'சிவம்' எனக் கூறுவோம். சிவம் என்பது தூய்மை, செம்மை ஒளி, அறிவு இன்பம்

திரு. ப. இ. தேவராசா
கொழும்பு

எனப்பொருள்படும். அறிவு என்றால் என்ன? 'செம பொருள் காண்பதறிவு' 'மெய்ப் பொருள் காண்பதறிவு' 'செம பொருட்டுணிவு' சிவம். சிவத்தை யடைதல் என்பது சிந்தையை - அறிவைத் - தெளிவித்தல், தெளிந்து ஐக்கியப்படுதல்.

"சிந்தைதனைத் தெளிவித்துச்
சிவமாக்கி எனையாண்ட"
— திருவாசகம்,
"சித்தமலம் அறுவித்துச்
சிவமாக்கி எனை ஆண்ட"
திருவா.

கடவுள் ஒருவர். அவருக்கு ஊர் இல்லை, பேர் இல்லை. உருவம் இல்லை. ஆனால் யாம் அவருக்கு ஆயிரம் நாமம் சூட்டிப் போற்றுவோம், என்று பாடுகிறார் திருவாசகம் தந்த மணிவாசகர். மாணிக்கவாசகர் தம்பாடல்களில் வாய்த்த இடங்களிலெல்லாம் இறைவனை சோதி வடிவானவனே, ஒளிவடிவே' எனப் பாடிப் போற்றுகிறார். ஒளி வணக்கம் - ஞாயிறு வணக்கம் மிகப் பழமையானது. உலகில் பல பாகங்களிலும் இவ் வணக்கம் இருந்ததாக ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். உலக மக்களின் பழைய சமய வரலாறுகளை நன்கு ஆராய்ந்த வரலாற்று ஆசிரியர் எல்லோரும் ஆதியில் உலக மக்கள் ஞாயிறை வெவ்வேறு பெயர்களால் வழிபட்டனர் எனக் கூறியுள்ளனர்.

"அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில்
அருக்கனாவான் அரனுருவல்லனோ"
(சம்தோ)
"சிவனெனு நாம் தனக்கேயுரிய
செம்மேனி எம்மான்" (திருவா.)

ஞாயிறு வணக்கம் பின் சிவவணக்கமாயிற்று.

திருவாசகத்தில் கடவுளைக்குறிக்க ஒளி என்னும் கருத்தைத் தருகின்ற சொற்றொடர்களை எடுத்துக் கோவையாக்கி மனனஞ் செய்து காலை மாலை அதைச்சொல்லி இறைவணக்கம் செய்யலாம், எச்சாதி சமயத்தவரும் பாடமாக்கி வணங்கலாம். திருவாசகத்தில் உருகாதார் ஒருவாசகத்திலும் உருகார். ஏறக்குறைய 71 இடங்களில் கடவுளைக் குறிக்கும் ஒளி தீ, ஞாயிறு என்ற சொற்கள் திருவாசகத்தில்காணப்படுகின்றன. உதாரணமாக சிலவற்றைப் பாருங்கள். "மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே, அச்சன் ஆண் பெண் அலி ஆகாசமாகி ஆரழலாய் அந்தமாய் அப்பால் நின்ற செச்சை மாமலர் புரையும் மேனியனே, ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி, சூழ் சுடர் ஞாயிறு போல அந்தரத்தே நின்றிழிந்திங் கடியவ ராசை அறுப்பவனே, ஈறிலாக் கொழுஞ் சுடர்க் குன்றே, இருள்கடிந்துள்ளத் தெழுகின்ற ஞாயிறே, சொல்லும் பொருளும் இறந்த சுடரே, கதிரை மறைத்தன்னசோதி, தெரிய அரிய பரஞ்சோதி" இச் சொற்றொடர்களெல்லாம் எத்தகைய விழுமிய கருத்துகளை இறைவனின் தன்மைகளை விளக்குகின்றன. திருப்பித் திருப்பிப்படிக்குந்தோறும் மனதை இலயப்படுத்துகின்றன. ஆகவே எல்லா மொழியினரும் ஏத்துங் கடவுளை, ஒளிவடிவானவனை உலகுக்கு நாயகனை, சாதி சமயப் பிரிவினை பாராது, மணிவாசகர் காட்டிய வழியினைப் பின்பற்றி வணங்கி நல்வாழ்வு பெறுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியரசும் குடியரசும்

2-ம் பக்கத்தொடர்ச்சி

எனக் கருதும் வகையில் நடக்க மாட்டார்கள். அரசன் தான் தன் பரிசனம் முதலியவற்றால் பிறர்க்குத் தீங்கிழைக்கக்கூடாது எனத்தரும சாஸ்திரம் வழி வகுக்கின்றது. தன் மகன் பசுக்கன்றைத் தேரால் நெரித்துக் கொன்று விட்டான் என்பதை அறிந்த மனுநீதிகண்ட சோழன் என்ன செய்தான். தன் குலத்தில்ஒரு மைந்தன் தான் உளன் என்பதைக் கவனிக்கவில்லை.

மேல்நாட்டு அரசியல் வந்து கலந்த பின்புதான் முடியரசு சீர்கேடு அடைந்தது. கீழ்நாட்டு முடிமன்னர் அரசியலைப் பெரும் பாரமாகவும் பொறுப்பாகவும் கருதினார்கள். ஆனால் மேல்நாட்டில் பதினான்காம் லூயி போன்ற முடிமன்னரோ அரசைத் தமது சுகபோக வாழ்க்கைக்கு ஒரு சாதனமாகக் கருதினர். அதனால் பிற்காலத்தில் இந்திய முடிமன்னர் சிலரும் தங்கள் மரபை விட்டுச் சுகபோகவாழ்க்கையில் ஈடுபட்டதும் உண்மையே.

சனநாயக அரசியல் என்பது மேல்நாட்டில் இருந்து இறக்குமதியான அரசியல் முறைதான். அது உலகம் என்பது உயர்ந்தோர்மாட்டு என்ற இலக்கணத்தை விட்டு உலகம் என்றால் படித்த படிக்காத ஆண் பெண் இருபாலாரும் என்ற புதிய வரமைப வகுத்துவிட்டது. இவ்வாறு முற்காலத்தில் அரசியல் நடந்திருக்குமாயின் சில வேடிக்கைகள் நடந்திருக்குமாம். உதாரணமாக ஒன்றைப் பார்ப்போம். இராமனிடத்தில் அயோத்தி மக்கள் எல்லாரும்தங்கள்உயிரையேபாதுகாப்புக்கு விட்டிருந்தார்கள். அவன்தேரில்செல்லும் போது தங்கள் உயிரே தேரின்மேற் போவதாகக் காண்கிறார்கள். அவ்வாறு அன்புடையவர்கள் சனநாயக முறையில் தசரதன் கொடுத்த வரம் பிழையானது என்று தீர்த்து விடுவார்களல்லவா? அப்படி நடக்கவில்லை. ஏன்? அற நெறியே அவர்களுடைய வாழ்க்கை நெறியானமையாலேயாம்.

இலங்கையில் அதிகமானோர் சிங்களம் பேசுகிறார்கள் ஆகையால் நாம் சிங்களம் படிக்கவேண்டும். முன்னே தமிழர் உத்தியோகத்திற்காக ஆங்கிலம் படித்தார்கள்; இப்போது சிங்களம் படிக்கவேண்டும். அதாவது எமக்குச் சுதந்திரம் இல்லை. எசமானர்கள் மாறியிருக்கிறார்கள். அல்ல என்று சொல்ல முடியாது. அல்ல என்றால் சனநாயக அரசியலில் ஏதோ பிழை இருக்கிறது. அது நம் நாட்டிற்குத் தக்கதாக மாற்றியமைக்கப்படவேண்டும்.

பொதுத் தேர்தல் நாள்

சித்திரை (ஏப்பிறில்) 5-ம், 7-ம், 9ம் திகதிகள் பொதுத் தேர்தல் நாட்களாக அரசாங்கம் தீர்மானித்திருக்கிறதாம்.

சாவகச்சேரி வடக்கு மத்திய சனசமூக சேவாசங்கம்

மேற்படி சங்கக் கூட்டம் 25-1-56 புதன்கிழமை மாலை ஞானோதய வாசிகசாலை மண்டபத்தில் திரு. எஸ். நாகேந்திர சர்மா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

பிரதம மந்திரியும் ஐ. தே. கட்சியாரும் மொழி பற்றிப் புனர் ஆலோசனை செய்து தமிழுக்குச் சம அந்தஸ்துக் கொடுக்க வேண்டுமென்றும், தமிழ்த்தலைவர்கள் ஐக்கியமுன்னணியை அமைக்கவேண்டுமென்றும் சுதந்திரநாள் துக்கநாளாகக் கொண்டாடவேண்டும் என்றும் நடக்கப்போகிற ஹர்தால் சாத்துவிகமானதாயிருக்கவேண்டுமென்றும் அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

திருமணம்

—0—

நாயன்மார்கட்டு திரு. க. சுந்தரம்பிள்ளை அவர்களின் புத்திரன் திருவளர் செல்வன் பரநிருபசிங்கம் B. Sc. (ஆசிரியர் பரமேஸ்வரக் கல்லூரி) அவர்களுக்கும் மட்டுவில் திரு. வி. குமாரசுவாமி அவர்களின் புத்திரி திருவளர் செல்வி சாரதா அம்மையாருக்கும் தை மீ 16 உ (1—2—56) புதன்கிழமை காலையில் மணமகள் இல்லத்தில் திருமணம் சைவமுறைப்படி சிறப்புற நடைபெற்றது. சுற்றமித்திரர் திரண்டு வந்து மணமக்களை ஆசீர்வதித்தனர். இறைவன் திருவருளால் மணமக்கள் இன்புற்று இனிதுவாழ்வார்களாக.

இலங்கைக் கொடி எரிக்கப்படுமாம்

இப்பொழுதுள்ள இலங்கைக் கொடியைப் பகிரங்கமாக எரித்து அதற்குப் பதிலாய்ப்பழைய சிங்கக்கொடியை ஏற்றுதற்கு திரிசிங்கள பெரமுனையைச் சேர்ந்தவர்கள் தீர்மானித்துள்ளனராம்.

திருமுறைப் போட்டி

கொழும்பு விவேகானந்த சபையார் நடாத்தும் திருமுறைப் போட்டி இவ்வருடம் சித்திரை மாதம் நடைபெறவிருக்கிறது. இவ்வருடம் இளைஞர்கள் மட்டுமன்றி வளர்ந்தோரும் பங்குபற்றக் கூடியதாய்ப் போட்டியை மூன்று பிரிவுகளாக நடத்துகிறார்கள். கீழ்ப்பிரிவில் 13 வயதுக்குட்பட்டோரும், மத்திய பிரிவில் 19 வயதுக்குட்பட்டோரும் கலந்துகொள்ளலாம். மேற்பிரிவில் கலந்துகொள்வோருக்கு வயதுக் கட்டுப்பாடில்லை. மேற்பிரிவில் முதலிடம் பெறுவோருக்கு தம்புரா ஒன்றும் ஏனைய பிரிவுகளில் முதலிடம் பெறுவோர்களுக்கு சுருதிப் பெட்டியும் பரிசிலகளாக வழங்கப்படும். விண்ணப்பங்கள் 15—3—56க்கு முன் அனுப்பப்படல் வேண்டுமென மேற்படி சபைப் பரீட்சா காரியதரிசி அறிவிக்கிறார்.

வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை தாபகர் தினம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் மாணவரும், சைவசித்தாந்தியும், சைவப்பிரகாச வித்தியாசாலைத் தாபகருமாகிய ஸ்ரீலஸ்ரீகந்தப்பிள்ளை அவர்களின் திருநாள் 23-1-56-ல் மேற்படி வித்தியாசாலையில் கொண்டாடப்பெற்றது. உதவி வித்தியாதிகாரி திரு, சே. தியாகராசா அவர்கள் தலைமை வகித்தார். திரு. மு. மயில்வாகனம் அவர்களின் வரவேற்புரையின் பின் அறிக்கை வாசிக்கப்பட்டது. அதில் பழைய மண்டம் ஆசிரியர்களின் தேவைக்கு அவசியம் வேண்டப்படும் என்றும் காண்பிக்கப்பட்டது. அதன் பின் திரு. வே. சோமசுந்தரம் அவர்கள் "பெரியாரும் சைவமும்" என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள். இந்துசாதனப்பத்திராதிபர் திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள் பேசும்போது இப்போது சைவத்துக்கும் தமிழுக்கும் போராயத்தான காலமென்றும், இப்படிப்பட்ட பெரியோர் தினத்தைக் கொண்டாடுவது சமயத்துக்கு உறுதுணையாக இருக்கும் என்றும், இப்பாடசாலை வளவுக்குள்ளே இற்றைக்கு எட்டு வருடங்கட்கு முன் தொடங்கப்பெற்ற அரசினர் பாடசாலை, இப்பாடசாலையை விழுங்காமல்லிட்டதற்கு மேற்படியாரின் ஆத்ம சக்தியே காரணம் என்றும் கூறினார். அன்றுபகல் மகேஸ்வர பூசை, சிவபூசை முதலியன நடைபெற்றன.

சைவ நோயாளர் சபை வேண்டுகோள்

காங்கேசன்துறை அரசாங்க வைத்தியசாலையிலுள்ள காசநோயாளர்கடவுள் வழிபாடு தியானம் ஆதியவை செய்தற்கு ஓர் மண்டபம் அமைக்கப்படுதல் அவசிய தேவை என்று எடுத்துக்காட்டி அத்தொண்டைச் செய்து நிறைவேற்றுதற்கு வேண்டிய பொருளுதவி புரியுமாறு மேற்படி சபைக் காரியதரிசி திரு. கா. கணேசு சைவநன்மக்களுக்கு ஓர் வேண்டுதல் விடுத்திருக்கின்றார்.

அனுப்பப்படும் பணம் காரியதரிசி அல்லது தனாதிகாரி சைவநோயாளர் சபை, C/o D. M. O. அரசாங்க வைத்தியசாலை காங்கேசன்துறை என்னும் விலாசத்துக்கு அனுப்பப்படவேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

புத்த ஆராய்ச்சிச் சபை சொல்வது

மது உண்டாக்குதல், விற்றல், குதிரைப் பந்தயம், அரசாங்க வைத்தியசாலைகளில் சன்னியாசுப்பெண்கள் சேவை என்பன நிறுத்தப்பட வேண்டுமென்று புத்த ஆராய்ச்சிச் சபையார் அரசாங்கத்துக்கு அறிக்கை சமர்ப்பித்திருக்கின்றனராம்.

உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

இருவாரப் பலன்கள், 5—2—56 — 11—2—56

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

ஒரு குழப்பமான வாரம். சுகவீனங்களுக்கிடமுண்டு. சிறு அபாயங்களுண்டாதற்குமிடமுண்டு. கந்தோரில் தொந்தரவுகளுக்கிடமுண்டு. ஆனால் இடையூறுகளை நீர் நீக்குதல் நிச்சயம். முதல் இரு நாட்களும் எல்லாவற்றிலும் பழுதானவை.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

குடும்ப வாக்குவாதங்கள் தொடர்ந்து நடக்கும். பிழை எண்ணங்களை நீக்குவதில் நீர் வருத்தப்படுவீர். பிதாவழி இனத்தவர் கோபம் மூட்டக்கூடும். வாக்குவாதங்களையும் சண்டைகளையும் செவ்வாய் புதனும் வியாழன் காலையும் தவிர்க்கவும்.

மிதுனராசி மிருகசீரிடம், 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

இந்தவாரம் உமமுடைய பகைவரை வெல்லுதல் நிச்சயம். ஆனால் உமக்கு மனச்சமாதான மிருக்கமாட்டாது, பணநிலைமை திடமாகத் திருந்துகின்றது. கடைசி இரு நாட்களையும் கவனமாய்க் கழிக்கவும்.

கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.

ஒரு தளப்பமான வாரம். தொந்தரவுகளைத் தவிர்க்கவேண்டுமானால் நீர் முதிய நண்பருடைய தீர்மானத்தின்படி நடக்கவேண்டும். உம்மளவில் நினைத்துத் தீர்மானிப்பதற்கு உமது மனம் தெளிவாயில்லை ஆனால் பணத்துறையில் நல்லவாரம்

சிங்கராசி மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.

மற்றவர்களோடு சண்டையிடுவதில் இந்தவாரம் முந்துவீர். மற்றவர்கள் உம்முடையகருத்தை மெச்ச முடியாவிட்டால் குற்றம் உம்முடையது என்று நினைக்கவும். எந்தக் கருமங்களிலும் தீர்மானங்களைத் திணிக்கவேண்டாம்.

கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

நீர் செய்வது சரியென்பதை மற்றவர்கள் நம்பச் செய்வதில், விசேடமாய்க் குடும்பச்சூழலிலுள்ளவர்கள் நம்பச் செய்வதில் நீர் வருத்தப்படுவீர். சண்டைகளைத் தவிர்த்து தேவை ஏற்படும்போது பின் வாங்கவும். ஆனால் உத்தியோகத் துறையில்நல்லவாரம். பணநிலைமைகளும் திடமாகத் திருந்தவேண்டும்.

துலாம்சித்திரை 3,4ம் பாதம். சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்

உம்முடைய கருமங்களில் தீர்மானங்கள் செய்யமுன் இந்தவாரம் நீர் அதிக சண்டையிடவேண்டும். நீர் சித்திபெறுதல் நிச்சயமான போதிலும் விரும்பத்தகாத ஒரு நிலைமையை அது நிச்சயமாய் உண்டாக்கும். இனத்தவர்களிலும் உமக்கு அன்னியரே உமக்கு அதிக உதவியாயிருப்பர்.

விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

உமக்கு இந்தவாரம் அளவுக்குக் கூடிய துன்பங்கள் உண்டாகும். எந்த ஒரு பக்கமாயும் தீர்மானம் செய்வதில் நீர் வருத்தப்படுவீர். சில சிக்கல்களை நீக்க முயலும் பொழுது நீர் சில நண்பர்களை இழக்கக்கூடும். பழிமொழிகளுக்காளாக்கப்படக்கூடுமாகையால் மற்றவர்களுடைய கருமங்களில் பிரவேசிக்கவேண்டாம்.

தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்

இந்தவாரம் பணநிலைமைகள் குடும்ப நிலைமைகள் நிச்சயமாய் நல்லவையாக மாறவேண்டும். அப்படியிருக்க சில புதுச்செலவுகள் உண்டாவதையும் நீர் காண்பீர் தேகசுகமும் சிக்கலாகவேயிருக்கும். விசேடமாகக் கண்நோய்கள்.

மகரராசி உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

ஒரு பக்கமாய் இழிமொழிகளை நீர் எதிரிடவந்த போதிலும் உம்முடைய முறைகளால் மற்றப்பக்கமாக நீர் சித்திபெறுவது நிச்சயமாகும். நாய்கள் குலைக்கின்றன ஆனால் பிரயாணக்கூட்டம் போய்க் கொண்டேயிருக்கின்றன என்றபடி பொருட்படுத்தாமல் நடக்கும் முறையை நீர் கையாளவேண்டும். சமூக சித்தியும் நிச்சயம்.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.

தனலாபம் நிச்சயம். உம்மிடம் புத்திகேட்க வரக்கூடுமென்று நீர் ஒருபோதும் காத்திராதவர்கள் வழிகாட்டுமாறு வந்து உம்மைக் கேட்பதைக் கண்டு நீர் அதிசயப்படக்கூடும். புகழும் பகைவாழிவும் நிச்சயம்.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

உம்முடைய முயற்சிகள் பலவற்றில் பிதாவழி இனத்தவர் தடையாயிருப்பார்கள், சண்டைகளுக்கும் பிழை எண்ணங்களுக்கும் இடமுண்டு சிறிது காலத்துக்கு ஒன்றையும் புதிதாய்த் தொடங்கவேண்டாம். வழக்கமான முறைப்படியே செயலாற்றுக.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உலகம்போற்றும்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தனை'. உண்மையின்படி நடந்தால் ஒருவருக்கும்பயமின்றிவாழலாம் என்பதை உணர்ந்தார். காந்தியடிகள் எந்தக் காரியத்தைச் செய்தபோதும் அவருக்கு உறுதுணையாக நின்றது இந்த "உண்மை"தான். பொய்யனாக, புரட்டனாக கள்வனாக, திருடனாக வாழ்ந்தால் திடீர் பணக்காரனாக சமூகத்தில் செல்வாக் குள்ளவனாக வாழலாம்; ஆனால் அப்படியான வாழ்க்கையில் மனச் சமாதானம்கிடையாது. நல்லவனாக மனச் சந்தோஷத்துடன் வாழ வேண்டுமானால் உண்மையின் வழி வாழவேண்டும். காந்தியடிகளின் வாழ்க்கை இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. காந்தி ஜியின் இன்னொரு துணைப் படை அஹிம்சை. பிறர் உடலும் உள்ளமும்நோகாதிருக்கும்படி கூடியளவு தன் செயல்களை ஆற்றிவந்தார். சாத்வீக முறையினால் போர் எதுவுமின்றி எல்லாக் காரியங்களையும் சாதிக்கலாம் என்பதை காந்தியடிகள் இந்தியாவிற்கு ஈட்டிக்கொடுத்த சுதந்திரம் தெளிவாகக் காட்டுகின்றது.

எடுத்ததற் கெல்லாம் "சிவன் செயல்" எனச் சொல்லும் மக்கள் வாழ்கின்ற நாட்டிலே, பிறப்பதும் இருப்பதும் இறப்பதும் எல்லாம் "அவன்" அருளால் எனச் சொல்லும் மக்கள் வாழ்கின்ற நாட்டிலே, "அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்கின்ற அசையாத நம்பிக்கை யுடைய மக்கள் வாழ்கின்ற நாட்டிலே, கடவுள் நம்பிக்கையை வளர்க்க வழிசெய்யும் ஒருவன்தான் தலைவனாக வர முடியும். இந்திய மக்கள் எல்லோரதும் இணையற்ற தலைவனாகக் காந்தியடிகள் விளங்கியதன் காரணம் இதுதான். இந்த உத்தமர் உலக மக்களை எவ்வாறு கவர்ந்தார்? இதற்குவிடையாக, அன்னாரது வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவங்களை எடுத்தெழுதிக் கொண்டே போகலாம். ஆனால் இப்போது அவர் செய்த செயல்களின் அடிப்படையிலே கிடந்து ஒளிவிடும் ஒரு பேருண்மையை நினைவில் வைத்தல் போதுமானது. காந்தியடிகள் நல்லதை நினைத்தார்; நினைத்தவற்றைச் சொன்னார்; சொன்னவற்றைச் செய்தார். காந்தியடிகளின் சிந்தனைக்கும், சொல்லிற்கும் செயலிற்கு மிடையில் இருந்த ஒரு உறுதியான பாலம்தான் அவரை உலகம் போற்றும் உத்தமராக உயர்த்தியது.

"உள்ளத்தால் பொய்யா தொழுகின்
உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

என்ற வள்ளுவன் வாக்கிற்கு இலக்கியமாக விளங்குகின்றார் காந்தி அடிகள்.

மயக்கத்தையும், மருட்சியையும் தரும் பற்பல 'isms'களுக்கிடையே நின்று தத்தளிக்கும் இளைஞர்கள், காந்தியடிகளின் வாழ்க்கையைப் பின்பற்றுவது சிறந்தது. மகாத்மாவாக வரமுடியாவிட்டாலும் 'மனிதனாக' வாழலாம்; அதுவும் முடியாவிட்டால் அதற்கான முயற்சிகள் எடுத்தல் நல்லதல்லவா? "முடிவைப்பற்றிக் கவலைப்படாது முயற்சிகள் எடுத்தலே உன் கடமை" என்பது பகவத்கீதை. இவற்றை நாம் நன்கு மனதில் பதித்துப் பணிபுரிதலே காந்தியடிகளுக்கு நாம் புரியும் கைமாறு ஆகும்.

"வாழ்க நீ எம்மான் இந்த
வையத்து நாட்டிலெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக்கெட்டு
பாழ்பட்டு நின்றதாமோர்
பாரத தேசந்தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா நீ வாழ்க வாழ்க"

(பாரதியார்)

அரசாங்க மதமுற்றானாம்

மாவனெல்லப் பிரதிநிதி ஸ்ரீ சி. ஆர். பெலிகம்மன, இலங்கை மக்களுட் பெரும்பான்மையோர் பௌத்தர்களாயிருப்பதால் ஏனைய மதங்களுக்குப் பங்கம்விளைவிக்காதவாறு பௌத்த மதத்தை அரசாங்கமதமாக்குதற்கு அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இச்சபை தீர்மானிக்கின்றது என்னும் பிரேரணையைப் பாராளுமன்றத்திற் பிரேரிப்பதற்கு அறிவித்தல் கொடுத்திருக்கின்றாராம்.

அடைவு நகை ஏல விற்பனவு

பருத்தித்துறை தும்பளை வடலிப்பாதியிலிருக்கும் அடைவு பிடிக்கும் ஸ்ரீமதி நாகப்பர் விஞ்சித்தம்பி & விஞ்சித்தம்பி சிவசுப்பிரமணியம் அவர்களிடம் 1952-ம் ஆண்டு ஆடி மாதம் 7-ந் திகதி தொடக்கம் 1953-ம் ஆண்டு மார்கழி மாதம் முடியும்வரையுமுள்ளதும் 1952 ம் ஆண்டு ஆடி மாதம் 1-ம் திகதி தொடக்கம் 1953 ம் ஆண்டு மார்கழி மாதம் முடியும் வரையுமுள்ள மீளாத நகைகள் யாவம் 1956-ம் ஆண்டு மாசி மாதம் 26-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் மேற்படியார் கடையிலிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

கா. முத்துக்குமாரு ஐயர்
வெந்தீஸ் மேஸ்தர்

சுந்நிதிவேல்
பருத்தித்துறை
18-1-56
M 219 27-1, 3-2

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணியம்மன் கோவில் 1955-ம் ஆண்டு யூலாய் 31-7-55 ன் இருப்பு விபரக் கணக்கு

	பற்று ரூபா. சதம்	வரவு ரூபா. சதம்
கோவில் வரவு		33129 76
வே. கந்தையா		100 00
வருட வரவு		11058 60
விக்கிரக மூர்த்திகள்	122 75	
வெள்ளி	2798 85	
மு. சி. துரைச்சாமி	237 00	
திருவாபரண நகைகள்	7 62 50	
கச்சேரியில் இருப்பு	525 38	
பசுமாடு	30 70	
வாகனம்	4784 75	
வே. விசுவலிங்கம் (இறுபிட்டி)	147 00	
ச. நா. கந்தையா	70 00	
மெர்க்கண்டயில் பேங்	515 00	
காணிக் கொள்வனவு	4225 00	
கொட்டகைவேலை	875 00	
நெல் இருப்பு	1492 10	
தளபாடம்	13309 59	
பல பெயர்வளிகள்	107 77	
பவண் இருப்பு	950 40	
இருப்பு	7734 55	
ஆக பற்று வரவு	44288 34	44288 34

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணியம்மன் கோவில்,
பரிபாலன சடையார்.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணியம்மன் கோவில் 1-8-54 முதல் 31-7-55 வரை வரவு செலவு விபரக் கணக்கு

	பற்று ரூபா. சதம்	வரவு ரூபா. சதம்
திருப்பணி நிதி		973 75
தென்னந் தோட்டம்		323 50
கடை நில வாடகை		150 00
அடிமைச் சாதனம்		72 00
அன்னப்பிரரசனம்		73 00
மாதாந்த அர்ச்சனை		428 25
கர்ணவேதனம்		44 00
அபிடேகம்		380 52
மீசுவரி நெற் காணிக்கை		1800 00
பொதுச்சபை அங்கத்தவர்		280 00
திருவிழாக் காணிக்கை		17575 31
சௌளம்		403 00
மூலஸ்த்தானம் சாத்து		821 00
தண்ணீர் வார்ப்பு		42 33
மாதாந்தக் காணிக்கை		5233 04
சகஸ்திர நாமம்		777 50
பூசை		3938 05
திருப்பணிச் செலவு	583 90	
நவராத்திரிச் செலவு	77 -4	
கந்தசஷ்டி பூசைச் செலவு	80 41	
திருவெம்பாவை பூசைச்செலவு	106 15	
மடம்றிப் பெயர்	328 30	
வழக்குச் செலவு	2283 92	
சம்பளச் செலவு	7833 82	
இஸ்றேசனறிச் செலவு	555 85	
பொதுச் செலவு	329 67	
திருவிழாச் செலவு	5906 69	
பூசைச் செலவு	2114 80	
நித்திய பூசைச் செலவு	2023 50	
நயினாதீவு காணிகள் செலவு	22 90	
புங்குடுதீவு காணிகள் செலவு	9 50	
ஆக வரவு செலவு	22256 65	33315 25
வருட வரவு		11058 60

M. 221 3—2.

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ௳ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இத்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும், முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond.) residing at 245, Navalar Road Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, a their Press, the Saiva Prakasa Press, Vannarponnai Jaffna on Friday FEB, 3, 1956

கோட்டுவிற்பனவு விளம்பரம்

1. கோண்டாவில் கார்த்திகேசு தம்பையா வழக்காளி இல. MB 203.

எதிராக,

கோண்டாவில்
1. மார்க்கண்டு சின்னத்துரை
2. மார்க்கண்டு பொன்னையா
3. மார்க்கண்டு செல்லையா

எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் MB 203-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1956 ௵ பங்குனி ௴ 10 ௳ சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் அந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக், யாழ்ப்பாணப்பகுதி, நல்லூர்க்கோயிர்பற்று, கோண்டாவில் இறை 'கிளுவைக்கட்டையடி நொச்சிக்காடு கள்ளியடி" நிலப்பரப்பு 2-ம், கிணற்றுப்பங்கும் வான்பயிர் செய்பயிர்களும் எல்லை: கிழக்கு, முருகேசு தருமலிங்கத்துக்கும் மற்றும் பங்காளிகளுக்குமுரிய ஆதனம். மேற்கு, சின்னப்பு கணபதிக்குரிய ஆதனம். தெற்கு, இராமு தம்புவுடைய ஆதனமும் அத்துடன் றோட்டுக்குச் செலவதற்கு வடக்கெல்லைக் காணிக்கூடாக உரிமையும்

2. ௸ கோண்டாவில் இறை, "விழாத்தியடி" நிலப்பரப்பு 4, அதில் சொரியலாக அரைவாசிப் பங்கும், பனைகளும். எல்லை: கிழக்கு, கையொழுங்கை வடக்கு, நவனி சிவபுண்ணியத்திற்குரிய ஆதனம், வேற்கு இத்தினி பெண் செல்வத்திற்குரிய ஆதனம், தெற்கு சின்னத்தம்பி ஆறுப்பிள்ளைக்குரிய ஆதனம்.

செ. பாண்டித்துரை,
கொமிஷனர்.

M. 225. 3-2. (து. 200)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org